அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 32/2025

எனது இலக்கம் : EST-6/03/LEA/1061(1)

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2025.12.15

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**வெள்ளப்பெருக்கு, மண்சரிவுகள் மற்றும் வீதிகள் தடைப்பட்டமை காரணமாக சேவைக்கு வருகை தராத அரசாங்க அலுவலர்களுக்கான விசேட விடுமுறை 2025 நவம்பர்**

2025 நவம்பர் மாதத்தில் நாட்டின் அனைத்து நிர்வாக மாவட்டங்களையும் பாதித்த "திட்வா" [Ditwah] சூறாவளி காரணமாக பலத்த காற்று நிலைமை மற்றும் அதிக மழைப்பொழிவின் காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு/வெள்ளம் மற்றும் மண்சரிவுகள் போன்றவற்றின் தாக்கங்கள் காரணமாக சேவைக்கு சமூகமளிப்பதற்கு தவறிய பின்வரும் அரசாங்க அலுவலர்களுக்கு விசேட விடுமுறை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

I. மேலே குறிப்பிடப்பட்ட விடயங்கள் காரணமாக தமது வதிவிடத்தில் இருந்து சேவை நிலையத்துக்கு வருவதற்கான பொதுப் போக்குவரத்துச் சேவைகள் தடைப்பட்டமை காரணமாக சேவைக்கு சமூகமளிப்பதற்கு இயலாமற்போன அலுவலர்கள்

II. வீதிகள் தடைப்பட்டமை காரணமாக அல்லது அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டிருத்தல் காரணமாக அல்லது இடம்பெயர்ந்திருத்தல் ஆகியன காரணமாக சேவைக்கு சமூகமளிப்பதற்கு இயலாமற்போன அலுவலர்கள்

02. குறித்த அலுவலரினால் விசேட விடுமுறை பெற்றும் கொள்ளும் பொருட்டு, தமக்கு சேவைக்கு சமூகமளிப்பதற்கு முடியாமற்போன காரணத்தைக் குறிப்பிட்டு, இணைப்பு I மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்தின் பிரகாரம், பிரதேச செயலாளரினால் சான்றுப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தை தமது பிரதேசத்தின் கிராம அலுவலரின் சிபார்சுடன், திணைக்களத் தலைவரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

03. பிரதேச செயலாளரினால் சான்றுப்படுத்தப்பட்ட அலுவலரின் கோரிக்கை நிறுவனத் தலைவரினால் பரிசோதித்து அதன் உண்மைத்தன்மை தொடர்பில் தனிப்பட்ட முறையில் திருப்தியுற முடியுமாயின், அலுவலரின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட

காரணங்களின் கீழ் சேவைக்கு சமூகமளிப்பதற்கு முடியாமற்போன நாட்களுக்கு மாத்திரம் விசேட விடுமுறை அனுமதிக்காக திணைக்களத் தலைவருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

04. இவ்வாறு வழங்கப்படுகின்ற விசேட விடுமுறைகள் உரிய நிறுவனத்தில் பேணப்படுகின்ற விடுமுறைப் பதிவேட்டில் பொருத்தமான வகையில் உட்படுத்தப்படல் வேண்டும். இவ் அனுசரணை 2025 ஆண்டில் நவம்பர் மாதம் ஏற்பட்ட "திட்வா" [Ditwah] சூறாவளி காரணமாக நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் ஏற்பட்ட அதிக மழைப்பொழிவு, வெள்ளப்பெருக்கு/வெள்ளம், மண்சரிவுகள் மற்றும் பலத்த காற்று நிலைமை காரணமாக சேவைக்கு சமூகமளிப்பதற்கு இயலாமற்போன, அலுவலர்கள் தொடர்பாக 2025 ஆம் ஆண்டின் நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களுக்கு உரியதாக மாத்திரம் வழங்கப்படல் வேண்டும்.

ஒப்பம்./ எஸ். ஆலோகபண்டார
செயலாளர்
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு


| | |
|---|---|
| தொலைபேசி இலக்கம் | : 011-2699399 |
| தொலைநகல் இலக்கம் | : 011-2692158 |
| மின்னஞ்சல் முகவரி | : ade-vi@pubad.gov.lk |

**<u>அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 32/2025 இற்கமைய வெள்ளப்பெருக்கு, மண்சரிவுகள், வீதிகள் தடைப்பட்டமை காரணமாக சேவைக்கு வருகை தராத அரசாங்க அலுவலர்கள் விசேட விடுமுறை கோருவதற்கான மாதிரி விண்ணப்பப்படிவம் – 2025 நவம்பர்</u>**

01. அலுவலரின் முழுப்பெயர் : ..............................................................................................

02. பதவி : ..............................................................................................

03. அமைச்சின் / திணைக்களத்தின் / மாகாண சபையின் பெயர்..............................................

..............................................................................................

04. சேவைத்தலத்தின் முகவரி : ..............................................................................................

..............................................................................................

05. வதிவிடம் :

நிரந்தரம் : ..............................................................................................

..............................................................................................

தற்காலிக : ..............................................................................................

..............................................................................................

06. பிரதேச செயலாளர்களின் பிரிவு : ..............................................................................................

07. சேவைக்கு சமூகமளிப்பதற்கு இயலாமற்போனதற்கான காரணம் :

வெள்ளப்பெருக்கு ☐ மண்சரிவு ☐

வீதி தடைப்படல் ☐ குடியிருந்த வீட்டிற்கு சேதம் ஏற்படல் ☐

08. அலுவலருடன் அனர்த்தத்துக்கு ஆளான குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை : ........................

09. அனர்த்தத்துக்கு முன்னர் இறுதியாக சேவைக்கு சமூகமளித்த திகதி : ............................

10. அனர்த்தத்தின் பின்னர் சேவைக்கு சமூகமளித்த திகதி : ............................

11. விடுமுறை கோருகின்ற நாட்கள் : ............................

12. திகதி :.................................. அலுவலரின் கையொப்பம் : ............................

13. கிராம அலுவலரின் சிபார்சு :

மேலே பெயர் குறிப்பிடப்படுள்ள திரு/திருமதி/செல்வி……………………………..
……………………............................... எனது கிராம அலுவலர் பிரிவில் வசித்து வருவதுடன், அவரினால் அனர்த்த நிலை தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விடயங்கள் உண்மையானதெனவும் சரியானதெனவும் விடுமுறை கோருவது தொடர்பாக சிபார்சு செய்கின்றேன்.

பெயர் : ..................................................................

திகதி : ............................................... கையொப்பம் :.........................................

(உத்தியோகபூர்வமுத்திரை)

14. பிரதேச செயலாளரின் சிபார்சு :

மேற்படி பரிந்துரைக்கு நான் உடன்படுகிறேன். / உடன்படவில்லை. விடுமுறைக் கோரிக்கை சிபார்சு செய்கின்றேன்./ சிபார்சு செய்யப்படவில்லை.

திகதி : ............................................... கையொப்பம் :.........................................

(உத்தியோகபூர்வமுத்திரை)

15. நிறுவனத் தலைவரின் சிபார்சு : விடுமுறையை சிபார்சு செய்கின்றேன்./ சிபார்சு செய்யப்படவில்லை.

திகதி : ............................................... கையொப்பம் :.........................................

(உத்தியோகபூர்வமுத்திரை)

16. திணைக்களத் தலைவரின் சிபார்சு : விடுமுறையை சிபார்சு செய்கின்றேன்./ சிபார்சு செய்யப்படவில்லை.

பெயர் : .....................................................................................

பதவி : .....................................................................................

திகதி : ............................................... கையொப்பம் :.........................................

(உத்தியோகபூர்வ முத்திரை)